No. of Printed Pages : **6**

**9075**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# பகுதி - III — சிறப்புத் தமிழ்
# Part - III — ADVANCED LANGUAGE — TAMIL

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** தம் மன்னன் மறைவிற்காகக் குடிமக்கள் வருந்திப் பாடுவதாக அமைந்த துறை :

(அ) பொருண்மொழிக் காஞ்சி (ஆ) கையறு நிலை

(இ) இயன்மொழி (ஈ) செவியறிவுறூஉ

**2.** கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் **சரியான** கூற்றுகளைக் கண்டறிக.

(1) மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே அறம்.

(2) சான்றோர் விலக்கியன ஒழித்தல் அறம்.

(3) தீமையை நீக்குவது அல்லது அறுப்பது அறம்.

(4) சான்றோர் விதித்தன செய்தல் அறம்.

(அ) (2), (3), (4) சரி (ஆ) (1), (2), (4) சரி

(இ) (1), (2), (3) சரி (ஈ) அனைத்தும் சரி

[ திருப்புக

3. திருவள்ளுவர் பிறந்த ஆண்டு :
(அ) கி.மு. 01 (ஆ) கி.பி. 31 (இ) கி.மு. 3 (ஈ) கி.மு. 31

4. எழுத்தாளனின் படைப்பாளுமையை நிருணயிக்கும் அளவீடு :
(அ) உள்ளடக்கம் (ஆ) மொழிநடை
(இ) உரையாடல் (ஈ) கதைப்பின்னல்

5. அக்கா நான் இங்கு வந்தது ஒரு வேளை சாப்பாட்டுக்கு இல்லக்கா. ஒரு வேலை போட்டுக் கொடுங்க - யார் யாரிடம் கூறியது ?
(அ) கம்சலை ராகினியிடம் (ஆ) காவேரி சுசீலாவிடம்
(இ) அஞ்சலை காவேரியிடம் (ஈ) ஆதிலெட்சுமி சின்னத்தாயிடம்

6. பொருத்துக.

| | **எழுத்தாளர்** | | **புதினம்** |
|---|---|---|---|
| (1) | பெருமாள் முருகன் | (i) | வேருக்கு நீர் |
| (2) | டி. செல்வராஜ் | (ii) | கூகை |
| (3) | சோ. தர்மன் | (iii) | தோல் |
| (4) | ராஜம் கிருஷ்ணன் | (iv) | நிழல் முற்றம் |

(அ) (1)-(i), (2)-(iv), (3)-(iii), (4)-(ii)
(ஆ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)
(இ) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)
(ஈ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

7. தியாக பூமி புதினத்தின் ஆசிரியர் யார் ?
(அ) இராமலிங்கனார் (ஆ) கல்கி
(இ) வடுவூர் துரைசாமி (ஈ) ராஜாஜி

8. கீழுள்ள கூற்றுகளில் எவை **சரியானவை** ?
**கூற்று 1 :** சங்க இலக்கியங்களில் குடக்கூத்து எனக் குறிக்கப்படுவது கரகாட்டம்.
**கூற்று 2 :** அலங்கரிக்கப்பட்ட கரகத்தைத் தரையில் வைத்து சுற்றி ஆடுவர்.
(அ) **கூற்று 1** தவறு, **2** சரி (ஆ) **கூற்று 1** சரி, **2** தவறு
(இ) **கூற்று 1** -ம், **2** -ம் சரி (ஈ) **கூற்று 1** -ம், **2** -ம் தவறு

9. தென்னிந்தியாவின் முதல் திரைப்படம் எது ?
(அ) காளிதாஸ் (ஆ) கீசகவதம்
(இ) ராஜா ஹரிச்சந்திரா (ஈ) தி ஜாஸ் சிங்கர்

**10.** 'வடமொழி, எபிரேயம், கிரேக்கம் ஆகிய மூன்று இலக்கிய மொழிகளில் தமிழ்ச் சொற்கள் கலந்திருக்கின்றன' என்று கூறியவர் :

(அ) மாக்ஸ்முல்லர் (ஆ) பெர்சிவல்

(இ) ஈராஸ் பாதிரியார் (ஈ) ரைஸ்டேவிஸ்

**11.** வேர்ச்சொல் ஆய்வுக்கான தரவுகளுள்ள தொல்காப்பிய இயலைத் தேர்ந்தெடுக்க.

(அ) இடையியல் (ஆ) பெயரியல்

(இ) உரியியல் (ஈ) வினையியல்

**12.** மார்க்சியக் கோட்பாட்டை உருவாக்கியவர் __________.

(அ) காரல் மார்க்ஸ் (ஆ) ஜான்சன்

(இ) பிரான்சிஸ் பேக்கன் (ஈ) ஜான் டிரைடன்

**13.** பாவைக் கூத்து என்றழைக்கப்படும் கிராமியக் கலை :

(அ) சிலம்பாட்டம் (ஆ) பொம்மலாட்டம்

(இ) காவடியாட்டம் (ஈ) கரகாட்டம்

**14.** ரேடியோ என்ற சொல்லுக்கு வானொலி என்ற தமிழ்க் கலைச்சொல்லை உருவாக்கி அளித்தவர் :

(அ) டி.கே. சிதம்பரனார் (ஆ) வெ. நல்லதம்பி

(இ) டி.கே. பட்டம்மாள் (ஈ) தென்கச்சி கோ. சுவாமிநாதன்

**15.** ராமாயணக் கதையினை தமிழகத்துச் சிறுவர் சிறுமியர் விரும்பிப் படிக்கும் வண்ணம் இனிய எளிய நடையில் ஒரு தொடர்நிலைச் செய்யுளாகப் பாடுமாறு நான் தமிழ்க் கவிஞர்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்றவர் :

(அ) கவிமணி (ஆ) ர. அய்யாசாமி

(இ) தென்கச்சி கோ. சுவாமிநாதன் (ஈ) பாரதிதாசன்

**16.** இந்திய வானொலி 1957 முதல் எப்பெயரால் அழைக்கப்பெற்றது ?

(அ) இந்திய வானொலி (ஆ) ஹாம் வானொலி

(இ) ரேடியோ ஒலிபரப்பு (ஈ) ஆகாசவாணி

**17.** செல்பேசி, டேப்லெட், திறன்பேசி போன்ற கருவிகளில் இயங்குவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு பயன்பாட்டு மென்பொருள் __________.

(அ) சிம்பியன் (ஆ) செயலி (இ) விண்டோஸ் (ஈ) ஓ.எஸ்

[ திருப்புக

**18.** ஐபோன் சந்தைக்கு வரும் வரை இந்த நிறுவனமே திறன்பேசி விற்பனையில் முதன்மையானதாக விளங்கியது :

(அ) சோனி எரிக்சன் (ஆ) மைக்ரோசாப்ட்

(இ) நோக்கியா (ஈ) பிளாக்பெர்ரி

**19.** ___________ திருவிழா தவாங் மாவட்டத்தில் நடைபெற்றது.

(அ) லோசர் (ஆ) ஓணம் (இ) ஹோலி (ஈ) மைதிலி

**20.** 2010 ஆம் ஆண்டு, அமெரிக்கன் டைலக்டிக் சொசைட்டியால் ''ஆண்டின் சொல்'' என்று தேர்வு செய்யப்பட்ட சொல் எது ?

(அ) APP (ஆ) WAP (இ) CPU (ஈ) OS

## பகுதி - II

**குறிப்பு :** பின்வருவனவற்றுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்க வேண்டும். **7x2=14**

**21.** கூடாவொழுக்கம் என்றால் என்ன ?

**22.** காப்பியத்தின் பெரும்பிரிவும் உட்பிரிவும் எவ்வாறு பெயரிடப்பட்டன ?

**23.** சாகித்ய அகாதெமி விருது பெற்ற புதினங்களுள் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.

**24.** எழுத்தாளர் அசோகமித்திரன் என்னென்ன பிரிவுகளில் நூல்களை எழுதியுள்ளார் ?

**25.** எந்திர மொழி பெயர்ப்பு - குறிப்பு தருக.

**26.** தமிழில் வெளிவந்த கலைத்தன்மை மிக்க திரைப்படங்களில் சிலவற்றைக் குறிப்பிடுக.

**27.** முடிச்சு என்றால் என்ன ?

**28.** 'நாசுதிராதிக் ஆய்வு' குறிப்பு வரைக.

**29.** மின்னணு ஊடகங்கள் என்று அழைக்கப்படுபவை எவை ?

**30.** இரவீந்திரநாத் தாகூர் நோபல் பரிசை எந்த நூலுக்காக எந்த ஆண்டு பெற்றார் ?

## பகுதி - III

**குறிப்பு :** பின்வருவனவற்றுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**31.** வினா விடையறியும் கருவி செயல்படுவது எவ்வாறு ?

**32.** கலம்பகம் - சிறுகுறிப்பு தருக.

**33.** கதைப்பின்னல் - வரையறு.

**34.** சங்கத்தில் சேர்வதால் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் நன்மைகளாகச் சுசீலா கூறியவை யாவை ?

**35.** திரைப்படத்தில் வசனம் பெறும் இடம் எத்தகையது ?

**36.** எவையேனும் ஆறு நவீன நாடகக் குழுக்களின் பெயர்களை எழுதுக.

**37.** சூழல் கோட்பாட்டை எவையேனும் இரண்டு சூழல்வழி எடுத்துக்காட்டுகளுடன் பொருத்திக் காட்டுக.

**38.** அமைப்பியல் அணுகுமுறையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**39.** நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் குறித்து எழுதுக.

**40.** மும்மருந்து நூல்கள் பற்றி எழுதுக.

## பகுதி - IV

**குறிப்பு :** பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**41.** (அ) நபிகள் நாயகத்தின் பெருமையை உமறுப்புலவர் எவ்வாறு விளக்குகிறார் ?

**அல்லது**

(ஆ) ஒரு திரைப்படம் கலைத்தன்மை வாய்ந்தது என எவ்வாறு கருதப்படுகிறது ?

**42.** (அ) முதலாளிக்கு ஆதரவாக இருந்த ராகினி, தொழிலாளர்களுக்கு ஆதரவாக மாறிய விதத்தினை விளக்குக.

**அல்லது**

(ஆ) வந்திருந்த விருந்தாளிகளை அவர்கள் அறியாதபடி கூர்ந்து நோக்கி, தாய் தனக்குத் தானே எவ்வாறு மதிப்பிட்டாள் ?

[ திருப்புக

**43.** (அ) வட்டார வழக்குப் புதினங்கள் குறித்து விளக்குக.

**அல்லது**

(ஆ) பழந்தமிழர் வாழ்வியலைச் சங்க இலக்கிய வழிநின்று விளக்குக.

**44.** (அ) கருவிசார் கலைகள் என்றால் என்ன ? ஏதேனும் ஒரு கருவிசார் கலை குறித்து விவரித்து எழுதுக.

**அல்லது**

(ஆ) திராவிட மொழிகளும் ஆங்கிலமும் தொடரமைப்பில் மாறுபடுவதை எவையேனும் ஐந்து எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**45.** (அ) 'சாரல்' என்னும் சொல் எவ்வாறெல்லாம் திரிந்து வழங்கியது என்பதை விளக்குக.

**அல்லது**

(ஆ) திறனாய்வினால் விளையும் பயன்கள் யாவை ?

**46.** (அ) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குறித்து விரிவாக எழுதுக.

**அல்லது**

(ஆ) வானொலி உரைச்சித்திரம் குறித்து விரிவாக எழுதுக.

**47.** (அ) செயலிகளின் வரலாற்றைச் சுருக்கி வரைக.

**அல்லது**

(ஆ) ஏதேனும் மூன்று மொழிப்பயன்பாட்டுக் கருவிகள் குறித்து விளக்குக.

**- o 0 o -**